1994 ஜனவரி 4]

152—

பூலாம்பாடியில் பகுதிநேர கால்நடை மருத்துவமனையை முழுநேரமாக்குதல்.

* ***19947*** - திரு. தா. செழியன்:

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் தொகுதி, பூலாம்பாடி பேரூராட்சியில் இயங்கும் பகுதிநேரக் கால்நடை மருத்துவமனையை முழுநேர மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு தே. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பெரம்பலூர் தொகுதி, பூலாம்பாடி பேரூராட்சியில் பகுதிநேர கால்நடை மருத்துவமனை என்ற அமைப்பு இத்துறையின்கீழ் பணிசெய்து வரவில்லை. கால்நடை கிளை நிலையம்தான் செயல்பட்டு வருகிறது. அதனை முழுநேர மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவது குறித்து தற்பொழுது கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. தா. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரைப்படத்திலும், வரைப்படத்திலும் மட்டுமே தென்கிழக்கு ஆசிய நாடுகளைப் பார்த்த சாதாரண குடியில் பிறந்த என்னை தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு அனுப்பி வைத்த ஆய்ந்தறியும் அறிஞர்களின் அறிவுப் பெட்டகம், மரகத மாளிகையின் மாணிக்கப்பெட்டகம், மாசற்ற மணிவிளக்கு, மாதர் போற்றும் திருவிளக்கு, மேலிடும் புகழ் குன்றில் மிளிர்ந்திடும் எழுச்சி நாதம், புகழ் ஏணிப் படியேறும் புனிதத் தாய், நான் தினமும் பூஜிக்கும் சுப்ரபாரதம், கோடானகோடி தமிழ் மக்கள் போற்றும் சாணக்கியம், காவல் தெய்வம், தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர் அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்கி இவ்வினாக் கணைகளை எழுப்ப விரும்புகிறேன். இந்த பூலாம்பாடி என்னுடைய தொகுதியில் நகரப் பேரூராட்சியாகும். இங்கு ஏறத்தாழ 20 ஆயிரம் கால்நடைகள் இருக்கின்றன. எனவே அந்த பகுதியில், இந்த பகுதி நேர கால்நடை மருத்துவமனை சரியான முறையில் செயல்படாத காரணத்தினால் பல்வேறு ஆயிரக்கணக்கான கால்நடைகளை இழக்க நேருகிறது. எனவே

முழுநேர மருத்துவமனையாக உயர்த்தித்தர அரசு முயற்சி எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்.153, டாக்டர் சு. மணிமேகலை. (குறுக்கீடு) பரிசீலிக்கப்படும் என்று சொல்லியாகிவிட்டது. நேரம் ஆகிவிட்டது. சில நேரங்களில் இரண்டாவது கேள்விக்கு விடமுடியாது.

திரு. தா. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோட்டையானாலும், ராணிப்பேட்டையானாலும், பழனி அறுபடை வீடானாலும் வெற்றியின் விடிவெள்ளியெனத் திகழும் கரு முதல் கல்லறை வரை, தமிழக மக்களுக்கு நல்ல திட்டங்களை வழங்கிவருகின்ற புரட்சித் தலைவியின் ஆட்சியில் வருகின்ற நிதியாண்டிலாவது இந்த முழு நேரக் கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 153, டாக்டர் சு.மணிமேகலை, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

153—

அரியலூர் அரசு சிமெண்ட் ஆலையைத் தனியாரிடம் ஒப்படைத்தல்.

*** 11175 - டாக்டர் சு. மணிமேகலை:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் அரசு சிமெண்ட் ஆலை இலாபத்தில் இயங்கி வருகிறதா?

(ஆ) அதனைத் தனியார் வசம் ஒப்படைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம். அரியலூர் சிமெண்ட் ஆலை 1990-91 ஆம் ஆண்டிலிருந்து இலாபத்தில் இயங்கி வருகிறது.